கழகத் தீர்மானக்குழு செயலாளர் அக்ரி கணேசன் -

# பா.பொன்னையன் ஐ.ஏ.எஸ். இல்லத் திருமண விழா!

**அமைச்சர்கள் துரைமுருகன் – கே.என்.நேரு – ஐ.பெரியசாமி – எஸ்.ரகுபதி – சிவ.வீ. மெய்யநாதன் – அன்பில் மகேஸ் பொய்யாமொழி – மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் – எம்.பி. – எம்.எல்.ஏ.க்கள் – அரசு அதிகாரிகள் – கழக முன்னணியினர் நேரில் வாழ்த்து!**

புதுக்கோட்டை, செப்.15-

கழகத் தீர்மானக் குழு செயலாளரும் முன்னாள் மாநில வேளாண்மை விற்பனைக் குழு வாரிய தலைவருமான அக்ரி கே.பி. டி.கணேசன் தம்பியும், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை இயக்குனருமான பா. பொன்னையா ஐ.ஏ.எஸ்., மகள் திருமணம் 8ஆம் தேதி புதுக்கோட்டை மாவட்டம் முத்துப்பட்டினத்தில் உள்ள மணமகன் இல்லத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி முன்னாள் ஒன்றிய கழகச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினருமான பால்சாமி அவர்களின் பேத்தியும், கழகத் தீர்மான குழு செயலாளர் அக்ரி கே.பி.டி.கணேசன் தம்பி பா.பொன்னையா ஐஏஎஸ், இ.சிநேகலதா தம்பதியின ரின் மகள் டாக்டர் பா.சௌதாமினி, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டச் முத்துப்பட்டினம் எஸ். ராமச்சந்திரன், கீதா தம்பதியரின் மகன் பொறியாளர் ரா. பால சண்முகம் ஆகியோரின் திருமணம் 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா முத்துப்பட்டினத் தில் மிக சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன், கழக முதன்மை செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, கழக துணை பொதுச் செயலாளர் அமைச்சர் ஐ.பெரியசாமி, அமைச்சர்கள் எஸ். ரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், சிவ.வீ.மெய்யநாதன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், எம்.பிக்கள் திருச்சி சிவா, டி.எம்.செல்வகணபதி, தங்க தமிழ்ச்செல்வன், எம்.எம்.அப்துல்லா, ஜோதிமணி, துரை வைகோ, கார்த்திக் சிதம்பரம், நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் வை. முத்துராஜா, பனமரத்துப்பட்டி ராஜேந்திரன், மாங்குடி, விடுதலை சிறுத்தைகள் கட்சி பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் எம்.பி, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சி தலைவர் அருணா ஐ.ஏ.எஸ், செ. ராஜேந்திரன் ஐபிஎஸ், திருச்சி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், தஞ்சை மாநகராட்சி மேயர் சன் ராமநாதன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன், ராமச்சந்திரன், ராமசாமி, புதுக்கோட்டை மாநகர செயலாளர் ஆ.செந்தில், த.சந்திரசேகரன். சுப.சரவணன், சு.சண்முகம், மிசா சி.ராமநாதன், செ.அசோக்பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், பரணி இ.ஏ. கார்த்திகேயன், அரு. வீரமணி, அழ.சுப்பிரமணியன், க.மதியழகன்,

பி.ராஜேஸ்வரி, எஸ். எஸ்.கருப்பையா, ஞான. இளங்கோவன், அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, எம்.லியாகத் அலி, அபுதாஹீர், ஆர்.ஆர்.கே. கலைமணி, இரா.ஆனந்த், எஸ்.ஜெயராமன், தென்னலூர் எம்.பழனியப்பன், என். சாத்தையா, இராகு.சந்தோஷ், சி.ஆர்.வி. சித்ரா, எம்.செந்தில்குமார், ஆர்.வி.செல்வம், கலைவாணி சுப்பிரமணியன், என்.வீரய்யா, ஆர். செல்லத்துரை. த. மணிராஜன், க.ராஜேந்திரன், தமிழக மக்கள் முன்னேற்ற கழக தலைவர் ஜான்பாண்டியன், கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், தவ. பாஞ்சாலன், பொன்.ராமலிங்கம், எம்.பரமசிவம், வெ.முத்துக் கிருஷ்ணன், மா.தமிழ் அய்யா, என். சேட்டு, ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து. ஓ.எஸ்.வெங்கடாச்சலம், மு.பி.ம.சத்தியசீலன், அ. இளங்குமரன், கே.பி. அய்யப்பன், சி.சண்முகம், ஆர்.ஆர்.சாமிநாதன், கே. பி.கே.டி.தங்கமணி, சக்தி ராமசாமி, வே.பொன்துரை, பொன். கணேசன், அ.முத்து, அரு.வடிவேல், அ.அடைக்கலமணி, அழகு சிதம்பரம், ஆர்.கணேசன், வி.ஆர். இளையராஜா, எஸ்.எம்.சீனியார், கே.எஸ். ரவி, எல்.குமார், உமுருகேசன், அ. அழகப்பன், கே.சி. சிவக்குமார், நாசர் (எ) செந்தில்குமார், ஆ.பழனிக்குமார், பி.அண்ணாத்துரை, ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், எம்.எம்.பாலு, சி.அரங்கநாயகம்,

தவசுமணி, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், டாக்டர் செ. குறிஞ்சிவாணன், பொன்.பாரி, தி.முத்து, பாத்திமா பீவி, தேவி, விமலாதி, ராஜா, கே.ஆர்.ராமசாமி, முத்துக் குமார், புத்தாம்பூர் சுப்பையா, டி.எம்.ஆர்.ராமமூர்த்தி டி.வளர்மதி, கே. கணபதி, அ.ரெத்தினம், குமரேசன், கருணாகரன், டாக்டர் சுதர்சன், எஸ்.வி.ஆர். ஜெய் ஸ்டாலின், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், அ.பிரபா, தவசுமணி, மேகநாதன், கவி வேந்தன்,

மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன், இரா.தமிழ் ராசு, கவிக்குமார்,

நசுருதீன், விளாப்பட்டி சிவா, முகம்மது ரபீக், சே. அருண்குமார், இளைய ராஜா, அன்சாரி பாஷீத், மு.பி.மணி, மணிமொழி மனோகரன், ராஜேந்திர சோழன், அஸ்ரப் அலி, வெற்றிச் செல்வன், டாக்டர் சதீஷ், மகேஸ்வரி சண்முகநாதன், மேகலா முத்து, மாலா ராஜேந்திரதுரை, உஷா செல்வம், டி.செல்வம், கை. பழனிச்சாமி மற்றும் அரசு அதிகாரிகள், உறவினர்கள், பொதுமக்கள், கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

## தி.மு.க மாணவர் அணி

# நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் கழக பொறுப்புகளுக்கான நேர்காணல்!

**மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

**கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, கழக ஒருங்கிணைப்புக் குழு ஆய்வுக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளந்தலைவர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா, எம்.பி., வழிகாட்டுதலுடன், கழக மாணவர் அணியின் நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் ஆகிய அளவில் நிர்வாகிகள் நியமிக்க நேர்காணல் கீழ்காணும் வகையில் செயல்படுத்தப்பட உள்ளது.**

**நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்பு: ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் என்று நியமிக்கப்பட உள்ளனர். அதில், பெண் துணை அமைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். பொறுப்புக்கு விண்ணப்பிப்பவர்கள் 30 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும் என்றும், அவர்கள் கல்லூரி படிப்பை முடித்திருக்க வேண்டுமெனவும், அல்லது தற்போது கல்லூரியில் பயிலுக்கூடிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக, ஒரு துணை அமைப்பாளர் தற்போது கல்லூரியில் பயிலும் மாணவராக இருக்க வேண்டும். (ஏதாவது பட்டப் படிப்பு (அ) பட்டயப் படிப்பு).**

**மேற்படி முறைகளை பின்பற்றி, நகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட அளவிலான மாணவர் அணி அமைப்பின் நிர்வாகிகளை விரைவாக தேர்ந்தெடுக்க, கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகள் முன்னிலையில் கீழ்காணும் அட்டவணைப்படி நேர்காணல் நடைபெற உள்ளது. மாவட்டக் கழக செயலாளர்கள் கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகளுக்கு முழு ஒத்துழைப்பை வழங்கி, நேர்காணல் நடத்திட உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**கழக மாணவர் அணி மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக செயலாளர்களுடன் கலந்து பேசி நேர்க்காணல் நடத்தி அதில் தகுதி உடையவர்களை தேர்ந்தெடுத்து நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்களின் ஒப்புதலுடன் மாவட்டக் கழக செயலாளர்களின் பரிந்துரை கடிதத்தை பெற்று இம்மாத இறுதிக்குள் நிறைவு செய்து, என்னிடம் அக்டோபர் மாதம் 6ந் தேதிக்குள் ஒப்படைக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

இரா. ராஜீவ்காந்தி

| பெயர் | நேர்காணல் தேதி | கழக மாவட்டம் |
|---|---|---|
| அதலை பி. செந்தில்குமார் | 20.09.2024 | தூத்துக்குடி வடக்கு |
| | 20.09.2024 | தூத்துக்குடி தெற்கு |
| | 19.09.2024 | கன்னியாகுமரி கிழக்கு |
| | 19.09.2024 | கன்னியாகுமரி மேற்கு |
| | 21.09.2024 | திருநெல்வேலி மத்திய |
| | 24.09.2024 | இராமநாதபுரம் |
| பி.எம். ஆனந்த் | 17.09.2024 | கடலூர் கிழக்கு |
| | 13.09.2024 | கடலூர் மேற்கு |
| | 18.09.2024 | கரூர் |
| | 10.09.2024 | தஞ்சை வடக்கு |
| | 12.09.2024 | தஞ்சை தெற்கு |
| பூர்ணசங்கீதா சின்னமுத்து | 14.09.2024 | விருதுநகர் வடக்கு |
| | 14.09.2024 | விருதுநகர் தெற்கு |
| | 22.09.2024 | தென்காசி வடக்கு |
| | 22.09.2024 | தென்காசி தெற்கு |

சி. ஜெரால்டு

| பெயர் | நேர்காணல் தேதி | கழக மாவட்டம் |
|---|---|---|
| சேலம் ரா. தமிழரசன் | 13.09.2024 | தருமபுரி கிழக்கு |
| | 13.09.2024 | தருமபுரி மேற்கு |
| | 11.09.2024 | திருவண்ணாமலை வடக்கு |
| | 11.09.2024 | திருவண்ணாமலை தெற்கு |
| | 27.09.2024 | திருச்சி தெற்கு |
| | 19.09.2024 | காஞ்சிபுரம் வடக்கு |
| | 18.09.2024 | காஞ்சிபுரம் தெற்கு |
| கா. அமுதரசன் | 12.08.2024 (மதியம்) | கள்ளக்குறிச்சி தெற்கு |
| | 20.08.2024 (காலை) | மயிலாடுதுறை |
| | 20.08.2024 (மதியம்) | நாகை |
| | 19.08.2024 | திருவாரூர் |
| ஜெ. வீரமணி | 12.09.2024 | கிருஷ்ணகிரி கிழக்கு |
| | 09.09.2024 | இராணிப்பேட்டை |

எஸ். மோகன்

| பெயர் | நேர்காணல் தேதி | கழக மாவட்டம் |
|---|---|---|
| மன்னை த. சோழராஜன் | 16.09.2024 | சென்னை வடகிழக்கு |
| | 01.10.2024 | சென்னை கிழக்கு |
| | 20.09.2024 | சென்னை தெற்கு |
| | 29.09.2024 | திருவள்ளூர் கிழக்கு |
| | 30.09.2024 | திருவள்ளூர் மத்திய |
| | 14.09.2024 | திருவள்ளூர் மேற்கு |
| கா. பொன்ராஜ் | 21.09.2024 | நாமக்கல் கிழக்கு |
| | 21.09.2024 | நாமக்கல் மேற்கு |
| | 22.09.2024 | சேலம் கிழக்கு |
| | 22.09.2024 | சேலம் மேற்கு |
| | 22.09.2024 | சேலம் மத்திய |
| வி.ஜி. கோகுல் | 19.09.2024 | திருப்பூர் வடக்கு |
| | 19.09.2024 | திருப்பூர் தெற்கு |
| | 18.09.2024 | ஈரோடு வடக்கு |
| | 18.09.2024 | ஈரோடு தெற்கு |
| | 26.09.2024 | நீலகிரி |
| | 04.10.2024 | தேனி வடக்கு |
| | 04.10.2024 | தேனி தெற்கு |

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள்: 11 - 9 - 2024

**சி.வி.எம்.பி.எழிலரசன்** எம்.எல்.ஏ.,
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# தாரமங்கலத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் - சிலைக்கு மரியாதை!

## மாவட்ட கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிக்கை!



சேலம், செப். 15-

சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சி தந்த காவியத் தலைவர் தமிழ்மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், வாழ்நாள் முழுவதும் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர், தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்த நாளான இன்று (15.09.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 மணியளவில் தாரமங்கலம் நகர தி.மு.க அலுவலகத்தில் இருந்து பேரணியாகசென்று பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு சேலம் மேற்கு மாவட்டதி.மு.க. சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

அதுசமயம் சேலம் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்கு உறுப்பினர்கள், இன்னாள் -முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் திரளாக கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மேற்கு மாவட்டத் திற்குட்பட்ட அனைத்து நகர, ஒன்றிய, பேரூர், வார்டு கிளை கழகங்கள் தோறும் இன்று (15.09.2024 ஞாயிற்றுக்கிழமை) பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு, மாலை அனிவித்து மரியாதைசெலுத்தி இனிப்புகள் வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் அண்ணா சிலைக்கு மாலை!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!



விழுப்புரம், செப். 15 -

விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன். கௌதம சிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அறிவுலக ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (15.09.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட கழக பொறுப்பாளராகிய எனது தலைமையில் (டாக்டர் பொன். கௌதமசிகாமணி) கழக துணைப் பொதுச்செயலாளர் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

நிகழ்வில் இந்நாள் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள், மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில்தெரிவித்துள்ளார்.

# திருவாரூர் மாவட்ட மகளிர் அணி - மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் கூட்டம்!

## மண்டல பொறுப்பாளர்களுடன் பூண்டி கே.கலைவாணன் ஆலோசனை!

திருவாரூர், செப்.15-

திருவாரூர் மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி ஆலோசனை கூட்டம், மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. மண்டல பொறுப்பாளர்கள் மாநில மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் ராணி ரவிச்சந்திரன், மகளிர் தொண்டரணி மாநில துணை செயலாளர் ரேகா பிரியதர்ஷினி ஆகியோர் பங்கேற்று மகளிர் அணி மகளிர் தொண்டரணி பணிகள் குறித்து ஆலோசனைகள் மேற்கொண்டனர்.

மகளிர் அணி அமைப்பாளர் ஷோபா கணேசன், மகளிர் தொண்டரணி அமைப்பாளர் விமலா பாலு, மகளிர் அணி மாவட்ட தலைவர் ராணிசேகர், நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தொடர் உழைப்பை அங்கீகரிக்கும்விதமாக அவருக்கு துணை முதல்வர் பொறுப்பு வழங்கிட தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் அவர்களுக்கு கோரிக்கை

மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி ஆகியவற்றிற்கு திருவாரூர் மாவட்டத்தில் அதிக அளவு உறுப்பினர்களை சேர்ப்பது.

சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் பெருமளவில் மகளிர் பங்கேற்று சிறப்பிப்பது.

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி கழக பவள விழாவை முன்னிட்டு வீடு கள்தோறும் கழக கொடி யேற்றி சிறப்பித்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



திருவாரூர் சட்டமன்றதொகுதிக்குட்பட்ட கூத்தாநல்லூர் நகரத்தில் கலைஞர் நூலகத்தை மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை ஏற்று திறந்து வைத்தார். மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நா.இளையராஜா, ஆனந்தகுமார், மாவட்ட அமைப்பாளர் பணங்குடி ஏ.எஸ்.குமார், நகர செயலாளர் எஸ்.வி.பக்கிரிசாமி, நகர்மன்ற தலைவர் பாத்திமா பஷீரா ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்வில் இளைஞர் அணி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் சி.கே..எஸ்.எழிலரசன், கல்யாணசுந்தரம், மாவட்ட துணை அமைப்பாளர்கள் வி.கே.முருகானந்தம், வினோத்குமார், எம்.பி.எடிசன், தாகீர் அலி, நகர மைப்பாளர் ராசன் பைசல் மற்றும் நகர கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

## 23 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**மாஸ்டர் தமிழ்ப்பித்தன் (எ) ம.வேலுச்சாமி**

(மாநில தொண்டரணிச் செயலாளர், தி.மு.க.)

15.9.2001 அன்று கழகத் தலைவரிடம் பதக்கம் பெற்ற மகிழ்ச்சியில் திளைத்த எங்கள் இதய தெய்வத்திற்கு நினைவஞ்சலி!

*மகன்*

**வேல்.உமாகாந்த்** துணைச் செயலாளர்,
மாநில பொறியாளர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மாஸ்டர் தமிழ்ப்பித்தன்**
**செப்டம்பர் 15 (2001)**



கழகத்தில் சாதாரண தொண்டராக இருந்து படிப்படியாக உயர்ந்து தி.மு.க. மாநில தொண்டர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்று சிறப்புற பணியாற்றியவர்.

2001ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று சிறந்த தொண்டர் அணியின் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் கையால் பதக்கம் பெற்றவர்.

தன் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் திருக்கரத்தால் விருதினைப் பெற்று அளவற்ற மகிழ்ச்சியில் நின்ற மாஸ்டர் தமிழ்ப்பித்தன் அதே இடத்தில் தன்னுயிரை இழந்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**